தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 6, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஆகஸ்ட் 22, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி."

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார். (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. 17–8–2016 அன்று முதல் ஒரு வார காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்ததை மறுபரிசீலனை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. நேரு, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அவர்களுடைய துறையின் சார்பாக மானியக் கோரிக்கைகள் தாக்கல் செய்து, பல்வேறு விளக்கங்களை எடுத்துச் சொல்லவிருக்கிறார்கள். கடந்த இரண்டு நாட்களாக உங்களிடம் கேட்டுக்கொண்டதுபோல, உங்களுடைய தீர்ப்பை மறுபரிசீலனை செய்து திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை, சட்டமன்ற உறுப்பினர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது சம்பந்தமாகத்தானே? சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. நேரு, நீங்கள் உட்காருங்கள். திரு. கரி. இராமசாமி, சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து உங்களிடம் நாங்கள் ஒரு கோரிக்கையை வைக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யச் சொல்வது சம்பந்தமாகத்தானே?*

திரு. கரி. இராமசாமி: *ஆம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. முஹம்மது அபூபக்கர், நீங்கள் சொல்லுங்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பு ஏற்கெனவே நீங்கள் வழங்கியதுதான். மாண்புமிகு அம்மா அவர்கள் வந்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. திரு. முஹம்மது அபூபக்கர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். அதாவது, திரும்பத் திரும்ப நீங்கள் எனது தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுங்கள் என்று என்னிடம் கேட்கிறீர்கள். ஆனால், ஏற்கெனவே நீங்கள் முதல் நாளிலே கேட்டபோதே, என்னுடைய உணர்வுகளையெல்லாம் சொல்லி, அதற்கான விளக்கங்களை இந்த அவைக்கு நான் தெளிவாகத் தெரிவித்துவிட்டேன். மீண்டும், மீண்டும் என்னை வற்புறுத்துகிறீர்கள். ஆனால், இங்கே வந்து நீங்கள் வற்புறுத்துகிற அதேநேரத்திலே, வெளியிலே என்னைப் பற்றி, பேரவைத் தலைவரைப்பற்றி, எவ்வளவு கேவலமாக, எவ்வளவு மோசமாக பேரவைத் தலைவரை விமர்சிக்க முடியுமோ, அவ்வளவு தூரம் விமர்சிக்கிறீர்கள். ஆனால், இங்கே வந்து மறுபரிசீலனை செய்யுங்கள் என்று கேட்கிறீர்கள். அதற்குமேலாக, இந்த அவையிலே உள்ள ஓர் உறுப்பினர், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள், இந்த அவைக்கே வராமல், இந்த அவையிலே வந்து பேச வேண்டியதைப் பேசாமல், அதற்குமாறாக, பேரவைத் தலைவரைப்பற்றி தவறான கருத்துகளை, அவர்கள் பத்திரிகைகளிலே எழுதுகிறார்கள். அவர், இங்கே வந்து பேசினால் அதற்கு உரிய பதிலை நான் நிச்சயம் கொடுப்பேன்.*

பத்திரிகைகளிலே அவர் எழுதுகிறார். நான் கொடுத்த பல தீர்ப்புகளுக்கு மாறாக, நான் தீர்ப்புக் கொடுக்கவில்லை என்று, உண்மைக்கு மாறாக, பல தவறான தகவல்களை அவர்கள் பத்திரிகைகளிலே தெரிவித்திருக்கிறார்கள்.

இப்படி என்னை மட்டுமல்ல; 1972-லே இருந்து அப்போது பேரவைத் தலைவராக இருந்த திரு. மதியழகன் அவர்கள் உட்பட எவ்வளவு கேவலமாக, பேரவைத் தலைவரை அவர் நடத்தியிருக்கிறார் என்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) பல உதாரணங்களை இந்த நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, பேரவைத் தலைவராகிய என்னைப் பற்றி எவ்வளவுதான் நீங்கள் பேசினாலும், அதையெல்லாம் நான் பொருட்படுத்தப் போவதில்லை. விதிகளின்படி இந்த அவையை நான் நிச்சயம் நடத்திக்காட்டுவேன். நான், உங்களுக்கு என்னுடைய பதிலாக மீண்டும் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்; என்னுடைய மனம் நொந்துபோய், எனக்கு வேறு வழியே இல்லாமல்தான், நான் பலமுறை இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களிடத்திலே கெஞ்சிப் பார்த்தேன்; அவர்களிடத்திலே வேண்டுதலாக வைத்துப் பார்த்தேன்; விதிகளின்படி நடவடிக்கை எடுப்பேன் என்று எச்சரித்தேன்; அவ்வளவு எச்சரிக்கைகளையும், அவ்வளவு வேண்டுதல்களையும் புறம் தள்ளிவிட்டு, தினம் தினம் வந்து என்னை அவையிலே நோகடித்த காரணத்தினாலே, வேறு வழியே இல்லாமல்தான் நான் அந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. ஆகவே, அதுகுறித்து மறுபரிசீலனைக்கு இடமே இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையை இதோடு முடித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவுதான், இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், இதற்கு மேற்கொண்டு, அதன்மீது பேச இடமில்லை. இதுகுறித்து பேச, நான், உங்களுக்கு வாய்ப்புத் தரமாட்டேன். (குறுக்கீடுகள்) இதற்குமேலே, நீங்கள் எதுவும் பேசுவதற்கு நான் அனுமதி தரமாட்டேன். நீங்கள் அமைதியாக அமருங்கள். அடுத்த அலுவல் குறித்த அவை நடவடிக்கைக்கு நான் செல்ல வேண்டும். இன்றைக்கு முக்கியமான மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்)